JUDICIAL MAGISTRATE COURT, AMBATTUR
DEPOSITION OF WITNESS

MC.No.3/2022    Date:09.04.2026    P.W. 1 / LW

| | |
|---|---|
| பெயர் | திருமதி.கௌசல்யா |
| தந்தை பெயர் க/பெ | திரு.சீனிவாசன் |
| முகவரி | நெ. 16, வடக்கு மாடவீதி சென்னை |
| கிராமம் | |
| மாவட்டம் | |
| ஜாதி | |
| தொழில் | |
| மதம் | |
| வயது | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the 09th day of April 2026.

**மனுதாரர் ஆஜர் எதிர்மனுதாரர் ஆஜர்.**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள ஜீவநாம்சம் வழக்கின் பாரா 7 இல் எதிர்மனுதாரருடன் 3 வருட காலம் சந்தோஷமாக வாழ்ந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதே 7 வது பாராவில் நான் எதிர் மனுதாரரை விட்டு 12.12.2019 முதல் பிரிந்து வாழ்வதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 28.12.2020 முதல் பிரிந்து வாழ்வதாக குறிப்பிட்டுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள வழக்கில் நானாகவே எதிர்மனுதாரரை விட்டு விலகி சென்றுள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 7 வது பாாவில் 70 சவரன் நகை என்று குறிப்பிட்டுள்ளேன் மேற்கண்ட 70 சவரன் நகையை எதிர்மனுதாரர் பார்த்ததில்லை என்று சொன்னால் சரியல்ல. 7 வது பாராவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை என எதிர்மனுதாரர் மறைக்கிறார் என்றால் சரியல்ல. எனது தந்தை எதிர்மனுதாரரை வீட்டோடு மாப்பிளையாக இருக்கவேண்டும் என வற்புறுத்தியால் அதற்கு எதிர்மனுதாரர் மறுத்ததால் நான் எனது தந்தை வீட்டுற்கு சென்றுவிட்டேன் என்று சொன்னால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னை அடித்ததோ துன்புறுத்தியதோ இல்லை என்றும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் வேண்டுமென்றே அடிக்கடி எனது பெற்றோர் வீட்டிற்கு சென்றுவிடுவேன் என்றும் எதிர்மனுதாரர் வந்து அழைத்தால் தான் நான் விருப்பபட்டால் தான் செல்வேன் சென்றால் என்றால் சரியல்ல. நான் எது பெற்றோருக்கு ஒரே மகள் ஆவேன். நான் கற்பமாக இருந்த போது எதிர்மனுதாரர் என்னை பார்ப்பதற்கு எனது பெற்றோர் வீட்டிற்கு வருவார் என்றும் அப்போது எனது குடும்பதார்கள் எதிர்மனுதாரரை தரகுறைவாக பேசுவார்கள் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் என்னையும் எனது இரு

குழந்தைகளையும் பார்ப்பதற்கு எனது வீட்டிற்கு வந்த போது எனது தந்தை பார்க்க விடவில்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தை எதிர்மனுதாரரை வீட்டோடு மாப்பிள்ளையாக இருக்க கட்டளையிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அதனை எதிர்மனுதாரர் ஏற்றுக்கொள்ளதாதல் என்னையும் எதிர்மனுதாரரையும் சேர்ந்து வாழவிடாமல் எனது தந்தை தடுக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. எனது தந்தைக்கு நான் ஒரே மகள் என்பதாலும அவர் வசதியாக ரியல் எஸ்டேம் பணம் சம்பாதித்து செல்வமாக வாழ்ந்து வருவதாலும் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ்வதற்கு தடுக்கிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் எனது தந்தையுடன் இருந்துக்கொன்டு வசதியான வாழ்கை வருவதாக என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக எனது பண்ட பாந்திர நகைகள் எதிர்மனுதாரரிடம் இருப்பதாக கூறி சட்ட அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் வழக்கறிஞர் மூலம் அனுப்பியுள்ளேன். எனது கணவரை விட்டு நானாக பிந்து சென்றதாக சொல்லப்படும் 12.12.2019 முதல் இந்த வழக்கு  தாக்கல் செய்த நாளான 08.09.2022 வரையிலான தேதிகளுக்கு காலங்களுக்கு வேறு ஏதேனும் ஜீவனாம்சம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தையி்னு துண்டுதலின் எதிர்மனுதாரரை துன்புறுத்துவதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.  நான் 02.04.2025 அன்று இந்நீதிமன்றதத்தில் DVC வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். மேற்கண்ட DVC வழக்கில் தங்க நகைகள் வெள்ளி பொருட்கள் மின்னனு சாதனங்களை எதிர்மனுதாரர் திருப்பி தரவேண்டும் என்று பரிகாரம் கூறியுள்ளேன் என்றால் சரிதான். மேற்கண்ட DVC  வழக்கில் தங்க நகை 49 சவரன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கின் 6 வது பாராவில் எததிர்மனுதாருக்கு 70 சவரன் நகை சீர்வரிசை தட்டுமுட்டு சாமான்கள் பீரோ, கட்டில், வாசிங்மிஷின், டிவி ,110 ஏசி வாட்டர் ஹுட்டர் முதலியவை சீர்வரிசையாக கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் சரிதான் மேலும் வெள்ளி பொருட்களும் கொடுத்ததாக சொல்லியுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள மனுவிலும் பிரமாண வாக்குமுலத்திலும் 70 சவரைன் தங்க நகைகள் வெள்ளி பொருட்கள் தட்டுமுட்டு சாமான்கள் இருப்பதாக எதிர்மனுதாரர் வசம் இருப்பதாக சொல்லிவில்லை என்று சொன்னால் சரியல்ல.  DVC வழக்கில் 50 சவரன் நகைகள் இதர சாமான்கள் ஆகியவை கணவர் வசம் இருப்பதாக  அதனை திருப்பி தரவேண்டும் என்று கேட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள  இந்த வழக்கு மனுவிலும் பிரமாண வாக்குமுலத்திலும் என்னையும் எனது குழந்தைகளையும் பராமித்து கொள்வதற்கு போதிய வசதி இல்லை என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவ்வாறு குறிப்பிட்டு சொல்லவில்லை என்றும் அதற்கு காரணம் எனது தந்தை வசதியாக செல்வாக்குடன் வாழ்ந்து வருவது தான் என்று சொன்னால் சரியல்ல.

**மறு விசாரணை –** இல்லை

Typed to my dictation in open Court.
Read over to the witness and admitted
by the witness as correct.

Judicial Magistrate,
Ambattur